Regd. No. M 3473

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)
ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 30	விசுவாவசுஸு மாசி – பங்குனி மீ மார்ச்—1966	பகுதி 12

MEMBERS OF THE EDITORIAL BOARD

1. Sri A. K. SITARAMAN, B.A., L.T. (*Editor*)
2. ,, L. MARIAPRAGASAM, B.A., L.T., J.P. (*Publisher*)
3. ,, FRANK DORAISWAMY, M.A., M.Ed. (*Journal Secretary*)
4. ,, V. S. SARAVANAN
5. ,, S. NATARAJAN
6. ,, R. RAJAMANICKAM
7. ,, V. PERUMAL
8. ,, M. S. ARULSWAMY.

உள்நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00 | [தனிப் பிரதி 25 பை.

பொருளடக்கம்

1. தலையங்கம் ... 205
2. ஆரம்ப ஆசிரியர் சங்கங்களின் செயல்முறையில் புரட்சி தேவை! ... 207
3. பறவைகள் ... 209
4. விடைப்பகுதி ... 212
5. கும்பகோணம் கத்தோலிக்க ஆசிரியர்கள் கூட்டணியின் மூன்றுவது மாநாடு ... 213
6. வினுப்பகுதி ... 214
7. கல்வி எதிரொலி (Education Echo) ... 215

Printed by Rev. Bro. Antony at the St. Louis Institute Press, Adyar, Madras-20 and Published by Sri L. Mariapragasam, B. A., L. T., J. P. for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.

Editor: Sri A. K. Sitharaman, B. A., L. T.

பாலர் கல்வி

தொகுதி 30 | விசுவாவசு ஹு மாசி—பங்குனி மீ மார்ச் 1966 | பகுதி 12

வாழ்க இந்திராகாந்தி! வளர்க கல்வி!!

மேருவெனப் புகழ்படைத்த நேருவின் மகளார் இந்திரா காந்தியார் இந்தியாவின் தலைமையமைச்சராக வந்ததைப் பாரதம் வரவேற்கிறது; பாரகமும் வரவேற்கிறது. பூரண ஞானம் பொங்கிய-பொங்குகின்ற பாரதம் ஒரு சின்னஞ் சிறு நாடல்ல; உலகிலுள்ள மிகப் பெரிய நாடுகளில் ஒன்றாகும். அந்நாட்டின் தலைவியாக ஒரு பெண்மணி வந்தது குறித்துப் பெருமைப்படுகிறோம்; பெருமிதம் கொள்கிறோம். பலதுறைகளிலும் முன்னேறிய நாடுகளாம் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும்கூட பெண்மணிகள் தலைமையமைச்சர்களாய், குடியரசுத் தலைவர்களாய் வந்ததாக வரலாறு கிடையாது. இன்னும் பல துறைகளிலும், முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தியாவின் தலைமையமைச்சர் ஒரு பெண் என்றால் எந்த இந்தியான்தான் பூரிப்புக் கொள்ளான்! ஐரோப்பாவின் விளையாட்டு நிலமாம் சுவிட்சர்லாந்தில் ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமமாகப் பழகிய போதிலும், அங்கே பெண்களுக்கு வாக்குரிமை கிடையாது. ஆனால், இங்கே வாக்குரிமை இரு பாலர்க்கும் உண்டு. 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம்' என்னும் கொள்கை வழி நிற்பது இந்நாடு. அதன் தலைமையமைச்சர் ஒரு பெண்ணென்று நினைக்கையில் எந்த இந்தியன் நெஞ்சுதான் மகிழாது; விம்மாது.

ஊழலென்ற புலி உறுமி நிற்க, உணவுப் பஞ்சம் என்ற பேய் நாட்டைக் கலக்கும் நாட்டியம் ஆட, செஞ்சீனம் என்ற சிறுநரி எல்லையில் ஊளையிட, நாகர் சிக்கல் என்ற நாகம் படமெடுத்தாட, வறுமை என்ற பிணி மக்களைவாட்டி வதைத்திட, அறியாமை என்ற இருள் முற்றிலும் அகன்றோடாமல் இன்னும் நிலைத்து நின்றிட, விழிப்போராம் மொழிப்போர் இன்னும் தென்னகத்தில் மிரட்டிக் கொண்டிருக்கக் கோலோச்ச வந்துளார் இந்திய நாட்டினை அம்மையார் இந்திரா காந்தியார். இத்தனைச் சிக்கல்களையும் எளிதாகவும், இனிதாகவும், அமைதியாகவும், அருமையாவும் அம்மையார் அவர்கள் தீர்த்திட ஆண்டவன் அருள்புரிவானாக வெனவேண்டுகின்றோம். எல்லா முன்னேற்றத்திற்கும் கல்வி முன்னேற்றமே அடிப்படை என்பதை அம்மையார் கருத்தில் இருத்திப் பாரதத்தின் மேன்மைக்கும், நன்மைக்கும் பாடுபடுவாராக. ஏனெனில், எல்லா வளமும் இருந்தும் கல்வி, இல்லா நாடு இருண்ட நாடன்றோ?

பள்ளிகளில் மாணவர்க்குப் பலவகைக் கல்வித் துறையில் பயிற்சி கொடுக்க வேண்டும் என்றும், ஆசிரியர்களின் சேவைத் தனி நிலைமை (Service conditions)களை மேம்படச் செய்யவேண்டும் என்றும், ஆசிரியர்கள் எத்தரத்தினராக (Grade) இருந்த போதிலும் அவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் நூறு ரூபாய் கொடுக்கப் படவேண்டும் என்றும், நிருவாகிகளையும், காவல் துறையினரையும் காட்டிலும் ஆசிரியர்கள் முக்கிய மானவர்களாகக் கருதப்படவேண்டும், ஆதலின் அவர்களுக்கு மற்றப் பணிகள் புரிவோரைக் காட்டிலும் அதிகமாக ஊதியம் வழங்கப் படவேண்டும் என்றும், பட்டப் படிப்பிற்கோ, பட்ட மேற்படிப்பிற்கோ (Post-graduation) படிக்கும் ஆசிரியர்களுக்கு ஆகும் செலவுகளை நடுவரசே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் பள்ளிச் சிறுவர்கள் தங்கள் பாங்கினைச் செலுத்தும் வண்ணம் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்றும், தொடக்கப் பள்ளிகளிலும், இடைத்தரப் பள்ளிகளிலும், மிகமிக முக்கியமாக அறிவியல் போதிக்கப் படவேண்டும் என்றும், இந்தி பேசாத மாநிலங்களில் வாழும் மக்கள் இந்தியை இந்தியாவின்

ஒரே அலுவல் (தொடர்பு) மொழியாக ஏற்றுக் கொள்ளும் வரை இந்தியுடன் ஆங்கிலமும் துணை மொழியாக நீடிக்கவேண்டும் என்றும், தனிப் பட்டோரால் நடத்தப்படும் பள்ளிகளைக் கட்டுப் படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் மாதிரி மசோதா ஒன்று கொண்டு வரவேண்டும் என்றும் நடுவரசின் கல்வி யமைச்சர் சாக்ளா அவர்கள் பாடுபடுகின்றார்கள். அவர் தம் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெற அம்மையார் அவர்கள் துணை நின்று ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரத்தையும், கல்வியின் தரத்தையும் உயர்த்த வேண்டும் என்று மிக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நாடு நலமும், வளமும் பெற ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன; செயற்படுத்தப் படுகின்றன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் 4 8% பணம்தான் கல்விக்கு ஒதுக்கப்பட்டது. இஃது இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டிற்கு மிகமிகக் குறைந்த தொகையாகும். ஏதாவது ஒரு திட்டத்திற்குப் பணம் போதவில்லையென்றால், உடனே கல்வியில்தான் கை வைக்கின்றார்கள்; அதற்கென்று ஒதுக்கப்பட்ட சிறு தொகையையும் இன்னும் சிறு தொகையாகக் குறைத்து விடுகிறார்கள். இப்பழக்கம் அடியோடு நிறுத்தப் படவேண்டும். மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம் முடிவுறும் தறுவாயில் இருப்பதால், உருப்பெற்று வரும் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலேனும் குறைந்தது 10% தொகையேனும் கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும், இது தொடர்பாக அனைத் திந்திய இடைத்தரக் கல்வி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் செவிடன் காதில் ஊதிய சங்காகக் கூடாதென்றும் இந்திரா காந்தியாரைக் கேட்டுக்கொள்கிறோம்.

வாழ்க இந்திரா காந்தி !

வளர்க கல்வி !!

★

ஓர் அறிவிப்பு

ஆசிரியர்கள் கல்வி தொடர்பான செய்திகளைத் தெரிந்து கொள்ளவும், பொருத்தமான கருத்துக்களைத் திருத்தமாக வெளியிடவும் விரும்பினால், தென்னிந்திய ஆசிரியர்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் திகழும் திருவாளர் மரியப்பிரகாசம் J. P. அவர்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைந்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அமல நிலையம்,

6, கச்சேரி ரோடு,

மயிலை, சென்னை - 4.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கங்களின் செயல் முறையில் புரட்சி தேவை!

(என். வி. பாலசுப்பிரமணியன்)

ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்கங்கள் சென்னையில் ஆங்காங்கே செயற்படுகின்றன. ஒவ்வொரு சரகமும். (Range) பல மையங்களாகப் (Centres) பிரிக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் மாதந்தோறும் ஏதேனும் ஒரு சனிக்கழமையில் கூடுகின்றன. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சங்கக் கூட்ட தினம் மகிழ்ச்சி நிரம்பிய தினமாகும். ஆரம்ப ஆசிரியர் சங்கங்களில் ஆண்களை விடப் பெண்களே அதிகம். ஆரம்பக் கல்வி பெரும்பாலும் அன்னையர் ஆதிக்கத்திற்கு மாறி வருவதை அங்கே கண் கூடாக் கண்டு மகிழலாம். 'அடித்தா? அணைத்தா?' என்று முன்னொரு காலத்தில் வினா ஒன்று பிறந்தது. இன்று பெருகிவரும் பெண் பாலாசிரியர்கள் அணைத்தே கற்பிக்கின்றனர். அடித்துக் கற்பிக்காவிட்டாலும், அடித்துப் பேசுவதில் வல்லவர்களாக அவர்கள் மாறி வருகின்றனர்கள் என்பதை, இச்சங்கங்களை எட்டிப் பார்ப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ளக் கூடும்.

நமது நாடு குடியரசு நாடு—குடியாட்சி கொடி கட்டிப் பிறக்கும் நாடு. ஆரம்ப ஆசிரியர் சங்கமும் குடியாட்சி முறையைப் பின்பற்றுகின்றது. தேர்தல் மூலம் செயலாளர், துணைச் செயலாளர், செயற் குழுவினர் முதலியோர் ஓராண்டு பதவியில் ஒட்டிக் கொள்கின்றனர். மறு ஆண்டில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் தான் இவர்கள் பதவியில் இருக்க முடியும். பெண்டிர் பெரும்பாலோர் தான்! ஆயினும் பெண் செயலாளர்களைப் பார்ப்பது குதிரைக்குக் கொம்பு முளைப்பதைப் போன்றது. பெண்கள் முக்கியமான பொறுப்புக்களைச் சிறுபான்மையினராகிய ஆண்மக்களுக்கே பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்து விடுகின்றனர். 'எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்' என்று கூறிக் கொள்வதை விட 'ஏத்தி ஆணமக்கள் போற்றிட' வாழ்வதிலேயே அவர்கள் காலத்தைக் கழித்து விடுகின்றனர்'.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் பதவியால் தலைவர் (ex-officio President) அவரின்றி ஓரணுவும் அசையாது. தலைவர் நுழைந்த உடனேயே சங்கத்திற்கு ஒரு சக்தி பிறக்கின்றது. குனிந்த தலைகள் நிமிர்கின்றன. சோர்ந்து வாடிய உள்ளங்கள் பூரிப்பால் பொங்குகின்றன. சிரிக்காத முகங்களும் சிறிது சிரிப்பை வரவழைத்துக் கொள்கின்றன. "வருவாரோ, மாட்டாரோ? செல்லலாமா, வேண்டாமா?" என்று தயக்கத்துடன் வெளியே நடமாடிய கால்கள் சரேலென உள்ளே பாய்ந்து ஓரிடத்தில் மடங்கிக் கொள்கின்றன. இவ்வாறு, தலைவர் நுழைவு ஒரு பரபரப்பை உண்டாக்குகிறது.

தலைவர் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் உள்ளங் கவர்ந்தவர். அவர் கூறுவனவெல்லாம் ஆரம்ப ஆசிரியர் உள்ளத்தில் மாற்றத்தையோ சீற்றத்தையோ எற்படுத்தா! ஆரம்ப ஆசிரியர்கள் ஒப்புக் கொள்ளக் கூடிய உயர் கருத்துக்களையே அவர் உரைப்பார். சில நேரங்களில் கடிந்து உரையாடினாலும் ஆசிரியர்கள் பொறுமையின் பெருமையை உணர்த்திக் கொண்டிருப்பர்.

ஒவ்வொரு ஆசிரியர் சங்கக் கூட்டமும் ஒரு குறித்த முறையையே விடாது பின்பற்றி வருகின்றது. இறை வணக்கம் முடிந்ததும் முந்தைய கூட்டத்தறிக்கை படித்தல், தலைவர் முன்னுரை இவை நடைபெறும். அடுத்துக் கலை நிகழ்ச்சிகள் கட்டாயம் நடைபெறும். இரண்டொரு பள்ளியைச் சேர்ந்த மாணவமாணவியர் குறைந்தது ஒரு மணி நேரத்திற்குச் சளைக்காமல் கலை விருந்து அளிப்பர். அதன் பின் புதியவர் கல்வி குறித்தோ, பொதுப் பொருள் பற்றியே சிறுசொற்பொழிவு செய்வர். தலைவர் முடிவுரை, நன்றியுரை, நாட்டுப்பண் இவையாவும் முட்டின்றி முடியும். சிற்சில நேரங்களில் இடையே சுற்றறிக்கைகளும் படிக்கப் பெறும் இதற்குள் அரை நாள் நகர்ந்துவிடும்.

ஆசிரியர் சங்கம் இன்றைய நிலையில் செயல்படும் முறையைக் கூறினேன். பெரும்பாலான சங்கங்கள் இம்முறையிலேயே இயங்குகின்றன. இச் சங்கங்கள் தொழில் மேன்மையை (Professional efficiency) எத்துணையளவு பெருக்கியுள்ளன என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆசிரியர் சங்கக்

கூட்டங்கள் பெரும்பாலும் பொழுது போக்கு மையங்களாகவே இன்று காட்சியளிக்கின்றன. கூட்டம் நடைபெறும் மகிழ்ச்சிக்குரியநாளாக வரவேற்கப்படுகிறது. பலர் ஒன்று கூடிப் பேசி மகிழ்கின்றனர். இந்த அளவிற்கு ஒரு சமூக நன்மை விளைகின்றது. இது மட்டும் போதுமா ?

கலை நிகழ்ச்சிக்குப் பகைவனல்லன் நான் ஆண்டுக்கொரு முறை அதை அளவோடு நடத்துவது அழகு. கலை நிகழ்ச்சியென்ற பெயரால் காலம் வீணுவதைத் தடுக்கவேண்டும். இதற்கென ஓராண்டுக்கு முன் கூட்டியே திட்டமிடலாம். பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் புதிய கற்பிக்கும் முறைகள், துணைக்கருவிகள் இவற்றைக் குறித்து ஆராயலாம். தங்கள் ஆராய்ச்சியின் முடிபுகளைக் காட்சி சாலையாக அமைக்கலாம். வகுப்பறையில் எத்துணையோ சிக்கல்கள் எழலாம். இச்சிக்கல்களைத் தங்களுக்குள் பேசிக்களைய வழி தேடலாம். ஒவ்வொரு கூட்டத்திலும் 'சிக்கல் நேரம்' (Problem Hour) எனத்தனியாக அரைமணியாவது ஒதுக்குவது இதற்குத் துணைபுரியும்.

ஆரம்பக் கல்விக்கான மாதப்பாடத் திட்டத்தை நன்கு ஆராயலாம். நூலுக்கும் திட்டத்துக்கும் மாணவர் திறமைக்கும் நடுவே உள்ள குறைகளைக் களையமுயலலாம். குறிப்பிட்ட வகுப்பாசிரியர்கள் அல்லது பாடஆசிரியர்கள் குழுக்குழுவாகத் தனியே கூடிச் சொற்போரிட்டாய்வது நன்மை பயக்கும். சிற்சில நேரங்களில் புத்தகத்தில் உள்ள தவறுகளைத் திருத்திக் கொள்ளவும், தேவையான புதிய உண்மைகளைச் சேர்த்துக் கற்பிக்கவும் இம்முறை பயன்படும். முறையில் முன்னேற்றம். துணைக்கருவிகள் செய்வதில் ஊக்கம் இவற்றை இவை ஊட்டும்.

ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவோர் பயனுள்ள பொழுது போக்குக் கலையொன்றை மேற்கொள்வது நலம். ஒத்தபொழுது போக்குக் கலை கற்பவர் ஒன்ருகக் கூடித் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு வளர்ச்சியடைய வழி வகுக்கலாம்.

ஆரம்ப ஆசிரியர் ஏணி போன்றவர். பிறரை ஏறவிட்டுத் தாம் மாருமலிருப்பர்' என்ற பேச்சு ஒழியவேண்டும். ஆரம்ப ஆசிரியர் மாணவனை முன்னேற்றித்தானும் முன்னேறலாம். எட்டாம் வகுப்பு வரை பொதுக் கல்வி பெற்றவர்கள் எஸ். எஸ். எல். ஸி. கல்வி பெற ஒன்ருகக் கூடலாம். தங்களுக்கு வழி காட்டவும் துணைபுரியவும் உயர் நிலைப்பள்ளியாசிரியர்களை இவர்கள் வரவழைத்துப் பயன்பெறலாம். இதே போலப் பள்ளியிறுதி வரை படித்தவர் பல்கலைக் கழகப் பட்டம் பெற முயலலாம். இவ்வாறு, தொழிலையும் தனிப்பட்ட ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள இச்சங்கங்கள் பாடுபடவேண்டும். அந்நாளே இச்சங்கங்களின் நோக்கங்கள் நிறைவேறும் நன்னுளாகும்.

குருடன் குருடனுக்கு வழிகாட்டியாக முடியுமா ? இந்த அதிசயம் ஆரம்பக்கல்வியில் நிகழ்வதாகக் கூறுகிருர் ஒரு பல்கலைச் செல்வர். இந்நாள் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் முன்னுள் மொழிந்த மொழி இது :

"The "Higher Grade" teachers in the Charge of the lower classes are but blind men leading the blind Children" (Tamil Culture Vol. VII. No3. P. 276) இக்குறையை ஓட்ட ஒரு வழி காட்டியாகப் பயன்படவேண்டும் ஆசிரியர் சங்கங்கள். தணிக்கையாளர்கள் (Deputy Inspectors of Schools) மாநிலக்கல்வி அலுவலர்கள் (District Educational Officers) ஆரம்பக்கல்வி இயக்குநர் (Director of Elemlntary education) முதலியோர் ஆரம்பக் கல்வி ஆசிரியரிடம் அன்பு கொள்ளவேண்டும். பெரியோர்களின் கேலிப் பேச்சுக்கு ஆரம்பக் கல்வியாசிரியரைப் பலியாக்கக் கூடாது. ஆரம்ப ஆசிரியர் சங்கங்களால்தான் ஆரம்ப ஆசிரியர்களைச் சீர்திருத்த முடியும். ஆரம்ப ஆசிரியர் செம்மை பெற்ருல் தான் இடை நிலைக் கல்வியும் உயர் கல்வியும் செழிப்படையும். இதனை மனத்தில் கொண்டு கல்வியின் தரத்தை உயர்த்தச் சங்கத்தின் செயல் முறைகளை மாற்றியமைப்பார்களா ?

★

பறவைகள்

(BIRDS)

(பிறையணிவோன்)

பறவைகள் பலவிதம். அவை ஒவ்வொன்றும் ஒருவிதம். அவை நிறத்தாலும் உருவத்தாலும் பழக்க வழக்கங்களினாலும் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன. இன்று 30,000க்கும் அதிகமான பறவைவகைகள் இருக்கின்றன. இவற்றை 27 பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். பறவைகளைப்பற்றி முறையாக அறிந்து கொள்ளும் விஞ்ஞானத்திற்குப் பறவைநூல் (ornithology) என்று பெயர்.

பறவைகள் எப்படி உலகில் தோன்றின என்று காண்போம். எல்லா பறவைகளும் முட்டையிலிருந்தே தோன்றி வெளிவந்தன. அப்படியானால் முட்டை எப்படித் தோன்றியது? இப்படிக் கேள்வி கேட்பது நெய்க்குத் தொன்னை ஆதாரமா? அன்றி தொன்னைக்கு நெய் ஆதாரமா? என்ற கேள்வியாக முடிந்து பயனின்றிப் போகும். ஆனால் பறவை நூல் வல்லுநர்கள் (ornithologists) பறவை எப்படி உலகில் தோன்றியது என்று ஆய்ந்து கண்டிருக்கிறார்கள். உலகில் உயிர்கள் தோன்றி வளர்ந்த அந்த ஆதி நாட்களில், அதாவது ஏறத்தாழ 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, நிலப்பகுதியில் டைனஸாரஸ் (dinosaurs) என்னும் ஊர்வன வகை (reptiles) விலங்குகள் மிகுதியாக வாழ்ந்து வந்தன. அவைகளில் சில நீரிலும், சில நிலத்திலும் வாழ்ந்தன. பெரும்பான்மையானவை தழையுண்ணிகளாக இருந்தன. சிறுபான்மை டைனஸாரஸ்கள் புலாலுண்ணிகளாக இருந்தன. ஆனால் புலாலுண்ணிகளின் தொல்லையை தழையுண்ணிகளால் தாங்க இயலாததாக இருந்தது. புலாலுண்ணிகளின் தொல்லையால் உயிருக்கு அஞ்சி சில சிறிய உடல் கொண்ட டைனஸாரஸ்கள் குன்று, பாறை, மலைகள் இவற்றின் உச்சிக்குச் சென்று வாழத் துவங்கின. பெருத்த உடல்கொண்ட புலாலுண்ணும் டைனஸாரஸ்கள் அவைகள் செல்லும் இடங்களுக்குச் செல்ல முடியாமல் திரும்பின. இவ்வாறாக உயரமான இடங்களுக்குச் சென்ற சிற்றுடல் ஊர்வன வகை உயிர்கள் உயிர் தப்பின. உயரமான இடங்களுக்குச் சென்று வாழ்ந்த உயிர்கள் படிப்படியாக முயற்சித்துப் பறக்கும் உறுப்புக்களைப் பெற்றுப் பறக்கும் ஆற்றல பெற்றன. பறக்கும் ஆற்றல் பெற்ற முதல் ஊர்ந்து செல்லும் உயிரை டெர்ரோடாக்டில்ஸ் (pterodactyls) என்று அழைக்கிறார்கள். டெர்ரோடாக்டில்ஸ் என்றால் "இறக்கை விரலி" (wing finger) என்று பொருள். இவற்றில் சில நாளாவட்டத்தில் பெரிதாகி வளர்ந்து திரிந்தன. அவற்றை ஆர்நிதோஸ்டுமா (ornithostoma) என்றழைக்கிறார்கள். உலகில் இதுவரை வாழ்ந்த பறவை இனத்திலேயே இதுதான் மிகப்பெரியது. இந்தப் பறவைக்குப் பெரிய தலையும் மூன்றடி நீளமுள்ள அலகும் இருந்தது. இதன் நீளம் சிறகு விரித்தால் 20 அடி இருக்குமாம். ஆர்நிதோஸ்டுமா என்றால் "பறவைவாய்" என்று பொருள். நாட்கள் செல்லச் செல்ல பறவைகளாக மாறிய ஊரும் உயிர்களுக்குச் சிறகுகள் முளைத்தன. ஆர்க்கியோப்டெரிக்ஸ் (archaeopteryx ancient wing) ஓடோன்டோடார்மே (odontotormae tooth bird), இக்தியார்நிஸ் (ichthyornis fish birdd) முதலான பறவைகள் சிறகு பெற்று பண்டைக் காலத்தில் வாழ்ந்திருந்தன.

அண்ட பேரண்டப் பறவைகளைப் (rocks) பற்றிக் கதைகளில் படித்திருக்கிறோம். ஆனால் உண்மையில் அவைகள் உலகில் இல்லை. அவைகளைப் பற்றிய செய்தியெல்லாம் கற்பனைகளே.

இன்று இந்த உலகில் வாழும் பறவைகளிலேயே மிகப் பெரியது அல்பட்ராஸ் (albatross) இது வெள்ளைச் சிறகுகளைக்

கொண்ட அழகிய பறவை. இப்பறவையின் இறக்கைகளை நீட்டி அளந்தால் பதினாறு அடிக்கு மேலிருக்கும். இது ஒரு கடற்பறவை. இது கழுகுகளைப்போல வானவெளியில் இறக்கைகளை ஆட்டாமல் பறக்கவல்லது. இறக்கைகளை ஆட்டாமல் பலமைல்கள் தொலைவுகூடச் செல்ல வல்லது. இது பறப்பதற்கு முன்னர் சில கஜ தொலைவு ஓடுகிறது.

இந்தியாவிலேயே மிகப்பெரிய பறவை சாரஸ் நாரை (saruscrane). இது ஒரு மனிதனுடைய உயரத்திற்கு நிற்கும். ஹிமாலய தாடிப் பிணந்தின்னிக் கழுகு (himalayan bearded vulture) என்ற ஒரு வகைப் பறவை உண்டு. இது இறக்கைகளை விரித்தால் 8 அடி நீளமிருக்கும். இந்த இரண்டுவகைப் பறவைகள் தான் இந்தியாவிலேயே மிகப்பெரிய பறவைகளாகும். இந்தியாவிலுள்ள பறவைகளில் மிகச்சிறியது என்று சொல்லக் கூடியது, டிக்கலின் தேன்சிட்டுகள் (tickell's flower pecker) ஆகும். இவைகள் நமது பெருவிரல் அளவே இருக்கும்.

பறவைகளைப் பழக்கி வேட்டையாட முன்னாளில் பயன்படுத்தினார்கள். மாலுமிகள் அண்மையில் நிலம் இருக்கின்றன என்று காண கூட்டில் அடைத்த நிலத்தில் வாழும் பறவைகளைக் கொண்டு கண்டார்கள். நிலம் அவைகளின் கண்களுக்குத் தெரியாமல் போனால் பறக்கவிடப்பட்ட பறவை திரும்பவும் கப்பலுக்கே வந்து விடும். செய்திகளை அனுப்பப் புறாப் போன்ற பறவைகளைப் பயன்படுத்தினார்கள்.

பறவைகள் தங்கள் சுற்றுச் சூழலுக்கு ஏற்றவகையில் தங்களுடைய உடலையும் வாழ்க்கையையும் அமைத்துக் கொண்டுள்ளன. பறவைகளையும் மற்ற விலங்குகளையும் பிரிப்பது பறவைகளின் உடலிலுள்ள இறகுகள்தாம். பறவைகளை இறகு பெற்ற இருகால் உயிரினம் (Feathered Bipede) என்று வர்ணிக்கலாம். பறவைகள் முதுகெலும்பு பெற்ற உயிர்கள். அவற்றின் உடலில் ஓடும் குருதி வெப்புக் குருதி உயிரின வகையைச் சேர்ந்தது. ஆனால் பறவைகள் தோன்றுதற்குக் காரணமான ஊர்வன வகை உயிர்களோ குளிர்க் குருதி கொண்டவை. பறவைகள் ஊர்வன வகையிலிருந்து வந்தன என்பதற்குப் பறவைகளின் உட்புற உடல் உறுப்புகளும், செதில்களோடு கூடிய கால்களும் ஊர்வன வகையோடு ஒத்திருப்பதே சான்றாகும்.

பறவைகளின் உடல் வெப்பம் 100 பாகை பாரன்ஹீட் வெப்பத்திலிருந்து 112 பாகை பாரன்ஹீட் வெப்பம் வரை உயர்ந்து உள்ளது. இந்த வெப்ப நிலை குட்டிபோட்டுப் பாலூட்டும் (Mammals) விலங்கு உயிர்களின் உடல் வெப்பநிலையை விட அதிகமாகவே இருக்கும். பறவைகளின் உடல் வெப்பத்தை அவைகளின் உடலில் அமைந்துள்ள இறகுகள் காக்கின்றன. இறகுகள் வெப்பத்தைக் கடத்தாதாகையால் இறகுகள் ஒரு போர்வையைப் போல உதவுகின்றன. பறவைகள் அதிகப்படியான குளிரையும், வெப்பத்தையும் தாங்கும் ஆற்றல் பெற்று இருக்கின்றன. பூஜ்ஜியத்திற்கு 60 பாகை பாரன்ஹீட் வெப்பத்திற்கும் குறைவான பனி படர்ந்த வடமண்டலத்திலும் 150 பாகை பாரன்ஹீட் வெப்பங்கொண்ட பாலை நிலங்களிலும் பறவைகள் உயிர்வாழ முடிகிறது. இதற்கெல்லாம் அவற்றின் இறகே காரணம். பறவைகளுக்கு மூன்று வகை இறகுகள் அமைந்து இருக்கின்றன. அவை: (1) **புற இறகுகள் (Contour Feathers or Pennae)** பறவையின் உடலின் மேலும் வாலிலும் நமது கண்களுக்குப் புலப்படும் இறகுகளே இவைகள். (2) **அக இறகுகள்.** புற இறகுகளுக்கு அடியிலே அமைந்திருக்கும் மென் கம்பளத் துணி போன்ற (Like Flannel Underclothing) இறகுகளே அக இறகுகள். (3) **மயிர் போன்ற நுண்ணிய இறகுகள்.** புற இறகுகளையும் அக இறகுகளையும் அகற்றாமல் இவ்வகை இறகுகளை மேலெழப் பார்க்க இயலாது.

பறவைகளுக்குத் தோலில் வியர்வைச் சுரப்பிகள் கிடையா. உடலின் வெப்ப நிலை பறப்பதன் மூலமோ அன்றி வேறு வகையிலோ அதிகரித்தால் அந்த வெப்பம்

நுரையீரலால் மூச்சு விடுவதன் மூலம் அகற்றப்பட்டு பறவையின் உடல் நிலை வெப்பம் ஒரே சீராகக் காக்கப்படுகிறது. பறவைகளுக்குப் பார்வைஆற்றலும் கேட்கும் ஆற்றலும் மிக அதிகம். சுவையறியும் ஆற்றல் ஓரளவுக்கே உண்டு. ஆனால் நாற்றம் அறியும் ஆற்றல் பறவைகளுக்குச் சிறிதும் இல்லை. பறவையின் கண்களுக்கு ஒரு வியப்பான ஆற்றல் உண்டு. அது என்னவெனில் அண்மையிலுள்ள பொருள்களைப் பார்த்து விட்டு உடனடியாகச் சேய்மையிலுள்ள பொருள்களைப் பார்க்க முடியும். பறவைகளின் கண்களிலுள்ள குவியாடி (Lense) அதற்குத் தகுந்தாற்போல் விரிந்தும் சுருங்கியும் கொடுக்கிறது. சொல்லப் போனால் பறவையின் கண் அண்மையிலுள்ள பொருள்களைப் பார்க்கும் போது நுண்பெருக்கி போலவும் (Microscope), சேய்மையிலுள்ள பொருள்களைக் காணும்போது தொலைநோக்கி (Telescope) போலவும் வேலை செய்கிறது.

பறவைகளின் இறக்கைகள், பறவைகளுக்கு மனிதனுடைய கைகளைப் போலப் பயன்படுகின்றன. இறக்கைகளின் தசைகளில் மிகுந்த ஆற்றல் அடங்கியிருக்கிறது. இறக்கைகளை விரைவாகக் காற்றை எதிர்த்து ஆட்டுவதாலேயே பறவை பறக்கிறது. இதற்கு ஏற்ற வகையில் உடலும் உடலிலுள்ள எலும்புகளும் எடையின்றி அமைந்திருக்கின்றன.

பறவைகளின் உடலும், அலகும் அவற்றின் உணவுப் பழக்கங்களுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. பறவையினுடைய அலகுகள் (Bills) ஒவ்வொரு பறவைக்கும் ஒவ்வொரு விதமாக அமைந்துள்ளது. கழுகு, பருந்து போன்ற புலால் உண்ணும் பறவைகளின் அலகு இறைச்சியைக் கிழித்து உன்பதற்கு ஏற்றவாறு நீண்டு வளைந்து அமைந்திருக்கிறது. புறா, கிளி போன்ற கூலம் அல்லது தானியம் உண்ணும் பறவைகளுக்குக் குட்டையான அலகுகள் தானிய மணிகளைத் தின்பதற்கு ஏற்றவாறு அமைந்திருக்கும். காகம், கோழி போன்ற பறவைகள் எந்தப் பொருளையும் தின்பதால் அவைகளின் அலகு உறுதியாகவும் பருமன் குறைந்தும் ஓரளவுக்கு நீண்டும் இருக்கின்றன. வாத்து போன்ற பறவைகள் நீரிலுள்ள மீன்கள், பூச்சிகள், புழுக்கள் போன்ற உயிர்களைத் தின்பதால் அவற்றின் அலகு ஒரு கரண்டிச் சல்லடையைப்போல நீண்டும் தட்டையாகவும் இருக்கிறது. அலகின் இரு பக்கங்களிலும் சல்லடை போன்ற பற்கள் அமைப்பு இருக்கிறது. வாத்து நீரில போகும்போது உணவையும், நீரையும், சேற்றையும் சேர்த்து விழுங்கும். மீன், புழு போன்ற உணவுப் பொருள்கள் வாயில் தங்கி, தண்ணீரும், சேறும் அலகுகளின் பக்கங்கள் வழியே வெளியே தள்ளப்படும். மரங்கொத்தியின் உணவாகிய புழுக்கள் பட்டைக்கடியில் இருப்பதால், மரப்பட்டையைத் தட்டித் துளை செய்யும் வகையாக அதன் அலகு நீண்டும், உறுதியாகவும், கூராகவும் அமைந்துள்ளது. இது போலவே ஒவ்வொரு பறவை வகைக்கும் அலகுகள் ஒவ்வொரு வகையில் அமைந்துள்ளது.

பறவைகள் வாழுமிடத்திற்குத் தக்கபடியும், அவைகளின் உணவுப் பழக்கங்களுக்கு ஏற்ற வகையிலும் கால்கள், விரல்கள் அமைந்துள்ளன. சில பறவைகளின் கால்கள் கிளைகளில் உட்காரும் அளவுக்கு மட்டிலுமே ஏற்ற வலிவுடைய வகையிலும், சில பறவைகளின் கால்கள் நிலத்தில் ஓடுவதற்கேற்ற வகையிலும், சில பறவைகளின் கால்கள் நீரில் நீந்திச் செல்வதற்கேற்ற சவ்வுகள் அமைந்தும் இருக்கின்றன.

பறவைகளின் வாழுங்காலம் ஒன்றுக்கொன்று வேறுபடுகிறது.

மூன்றங்குல முள்ள ஒரு வியப்பூட்டும் செங்கழுத்துப் பறவை ஒன்று இருக்கிறது. அதன் பெயர் ஊங்காரக் குருவி (humming bird). அதனுடைய அலகு மட்டும் $1\frac{1}{2}$ அங்குலமிருக்கும். அவைகள் மலரில் உள்ள தேனையும் பூச்சி புழுக்களையும் உண்டு வாழ்கின்றன. அவைகள் மிகச் சிறப்பான பறக்கும் ஆற்றல் உடையவை. அவற்றால் முன்னும், பின்னும் பறக்க முடியும். மேலுங், கீழும் பறக்க முடியும். அந்தரத்தில் இறக்கைகளை வேகமாக அசைப்பதின் மூலம் நிற்க முடியும். அவற்றின் கால்கள் மிக மெல்லியவை;

சிறு குச்சிகளிலும் இலைகளிலும் நிற்பதற்கே அவை பயன்படுகின்றன. இப்பறவைகளால் ஓடவோ நடக்கவோ இயலாது. சிறு கிண்ணம் போன்ற கூடுகளைச் சிலந்தி வலைகளைக் கொண்டும், பட்டைகளைக் கொண்டும் கட்டுகின்றன. கூட்டினுடைய அளவு பாதி உடைந்த கோழி முட்டையின் அளவு கூட இருக்காது. இக்குருவி ஒரு முறைக்கு இரண்டு முட்டைகள் இடும். முட்டையின் அளவு பட்டாணியின் அளவே இருக்கும். அவற்றின் இறகுகள் பச்சை வண்ணமாக இருக்கும். ★

விடைப் பகுதி

1. **ஊதியம் :** குறிப்பிடத் தக்க வேறுபாடுகள் இல்லை.

விடுக்கை : ஈட்டிய விடுக்கை (Earned Leave) அரசாங்கப் பள்ளிகளில் வேலை செய்வோருக்கு உண்டு. ஆனல், தனியார் நடத்தும் இடைத்தரப் பள்ளிகளில் (Secondary Schools) அவ்விடுக்கை கிடையாது.

சேவைத் தனி நிலைமைகள் : (Service Conditions) தனியார்ப் பள்ளிகளில், சேவைத் தனி நிலைமைகள் அப்பள்ளிகளின் தனிப்பட்ட சூழ்நிலைகள், பொருளாதார நிலை முதலியவற்றிற்கு ஏற்றாற்போல் மாறுகின்றன. ஆனல், அரசாங்கப் பள்ளிகளில், ஒரே விதமான சே. தனி நிலைமைகள் உள்ளன. இதனல் அரசாங்கப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குச் சில விஷயங்களில் அனுகூலங்களும் சில விஷயங்களில் பிரதிகூலங்களும் உண்டு.

2. தெ இ. ஆசிரியச் சங்கம் உயர்த்தப்பட்ட சேமநல நிதியை (Enhanced T. P. F.) நிறுத்தும்படி கனம் அமைச்சர் அவர்களையும், இயக்குநர் அவர்களையும் கேட்டது. தீர்மானங்கள் பல நிறை வேற்றியும் அனுப்பியது. அனுப்பிக் கொண்டும் வருகிறது. இது வரையிலும், இது சம்பந்தமாக நல்ல தோர் முடிவு அரசினரால், எடுக்கப்படவில்லை. ஆனல், இதை நிறுத்த வேண்டுமென இடைவிடாமல் தெ. இ. ஆ. சங்கம் கேட்டுக்கொண்டே இருக்கும்.

3. தெ. இ. ஆ. சங்கம் ஒன்றுதான் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாகும். இதனல்தான், கல்வி தொடர்பான அரசாணைகளைத் "தென்னிந்திய ஆசிரியர்" (South Indian Teacher) என்ற ஆங்கிலப் பத்திரிக்கையிலும், "பாலர் கல்வி" என்ற தமிழ்ப் பத்திரிக்கையிலும் வெளியிட அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது. ஆசிரியர்தொடர்பான எந்த விஷயத்திலும் தெ. இ. ஆ. சங்கத்தின் ஆலோசனை அரசினரால் கேட்கப்படுகிறது. தெ. இ. ஆ சங்கமும் அப்போதைக்கப்போது ஆசிரியர்களின் குறைகளையும், கஷ்டங்களையும் அரசினர்க்கு எடுத்துக் கூறுகிறது. இப்போது ஆசிரியர்கள் பெற்றுள்ள ஒவ்வொரு சலுகைக்கும் காரணம் தெ. இ. ஆ. சங்கந்தான் என்றால் அது மிகையாகாது. ஏனெனில், இச்சங்கத்தைத் தவிர ஆசிரியச் சமுதாயம் தொடர்பாகப்பேச அதிகார பூர்வமான வேறு எந்தச் சங்கமும் கிடையாது.

நண்பர் கேள்வியில், ஒரு சலிப்பு மனப்பான்மை தோன்றுகிறது. ஆசிரியர்களுக்கு இன்னும் எவ்வளவோ சலுகைகள் அரசாங்கம் தர வேண்டியுள்ளது. எனச் சலுகைகள் இன்னும் தரப்படவில்லையென்றும், ஆசிரியர்களின் குறைகளை எனின்னும் தீர்க்கப்படவில்லை என்றும் அன்பர் குறைப்பட்டுக் கொள்ளக் கூடாது.

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றுபடுவார்களாக; தெ. இ. ஆ. சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேருவார்களாக; அதன் கையை ஓங்கச் செய்வார்களாக. அப்போதுதான் சங்கம் உறும் சொற்களுக்கு அரசினர் உடனே செவி சாய்ப்பர்.

கும்பகோணம் கத்தோலிக்க ஆசிரியர்கள் கூட்டணியின் மூன்றாவது மாநாடு

1966ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் நாள் கும்பகோணம் மேற்றிராசனக் கத்தோலிக்க ஆசிரியர்கள் கூட்டணியின் மூன்றாவது மாநாடு கும்பகோணம் சிறிய மலர் துவக்கப்பள்ளி அரங்கில் மிக. சங். எம். பி. சின்னப்பர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுத் தமிழ் நாடு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், செகண்டரி கல்வி இயக்குநர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டது. சுமார் 1000க்கு அதிகமான ஆசிரியை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

1. நமது அன்பிற்குரிய பாரதப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் திடீர் மறைவு குறித்து இம்மாநாடு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

2. நாட்டின் பாதுகாப்பிற்கும், இதர பொதுச்சேவைகளுக்கும் ஆசிரியப்பணி புரியும் ஒவ்வொருவரும் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறார்கள் என்பதை இம்மாநாட்டு மூலம் அரசினருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

3. ஆசிரியர்களுக்குச் சம்பளத்தில் பஞ்சப்படி உயர்வு அளித்தமைக்கு இம்மாநாடு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

4. ஆசிரியர்கள் பண்டிகைகால விடுதி மூன்று நாட்கள் எடுத்துக் கொள்ளலாம் என்ற உத்தரவு கிடைத்தமைக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

5. ஆசிரியர் பணிபுரியும் யாவருக்கும் பஞ்சப்படியில் ஏற்றத் தாழ்வின்றி ஒரே சீராகக் கொடுத்துதவ வேண்டுமாய் இம்மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

6. செகண்டரிகிரேடு ஆசிரியர்கள் எவ்வகுப்பில் போதித்தாலும் செகண்டரி கிரேடு ஊதியம் அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறது.

7. நான்காம், ஐந்தாம் வகுப்பு ஆங்கில புத்தகங்களின் தரம் கடினமாக இருப்பதால் மாற்றிச் சுலபமான முறையில் தயாரிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறது.

8. ஓய்வு காலத்தில் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் தொகையை 50 சதவீதமாக உயர்த்தும்படி கேட்டுக் கொள்கிறது.

9. ஆசிரியர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதி அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறது.

10. மேல் சபையில் ஆசிரியர் தொகுதியை நீடிக்கும்படியும், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஓட்டுரிமை வழங்கும்படியும் வேட்பாளர்களாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் நிற்கவும் ஆவன செய்யும் படியும் இம்மாநாடு அரசினரைக் கோருகிறது.

11. பள்ளிகளில் பணிபுரியம் ஆசிரியர்களுக்கும், இதர சிப்பந்திகளுக்கும் அரசினர் வீடுகள் கட்டிக் கொடுப்பதோ அல்லது வீடுகள் கட்டிக் கொள்ள நீண்ட கால கடன் வசதி அளிப்பதோ வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறது.

12. ஆசிரியப் பணிபுரிபவர்கள் ஓர் நிர்வாகத்திலுள்ள பள்ளியிலிருந்து மற்றோரு நிர்வாகத்திலுள்ள பள்ளிக்குச் சென்றால் பணி புரிந்த காலத்தைக் கணக்கில் சேர்த்து உரிய சம்பளமும் உயர்வுத் தொகையும் அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

13. புதிதாக உயர் நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்க மூலதனம் ரூ. 70/-ஆயிரம் கட்ட வேண்டும் என்ற விதியை மாற்றிப்

பழைய விதியையே அமல் நடத்த வேண்டு மாய்க் கேட்டுக் கொள்கிறது.

14. ஆரம்பப் பள்ளிகளில் 10 ஆசிரியர் களுக்கு மேல் ஓர் அதிகப் படியான ஆசிரியர் இருக்கலாம் என்ற விதியை மாற்றாமல் இருக்கக் கேட்டுக் கொள்கிறது. மதிய உணவுக் கணக்குகள் இதர ஆபீஸ் அலுவல் களைக் கவனிக்க ஓர் ஆசிரியர் தனியாக இருக்க வேண்டியது அவசியம் என்பதை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

15. ஆசிரியர்கள் மான்ய உதவித் தொகையாற்றக் கருவூலம் சென்றால் அந்த நாளை வேலை நாளாகக் கருதும்படி கேட்டுக் கொள்கிறது.

16. மாணவர்கள் எஸ். எஸ். எல் ஸி. வரை இலவசக் கல்விகற்க வசதி அளித்தமைக்கு இம்மாநாடு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. ஆனால் அதிகமான மாணவர்கள் வருகையால் புதிய பள்ளிகளையோ மேல் வகுப்புகளையே தனிப்பட்ட நிர்வாகிகள் தொடங்குவதற்கு வேண்டிய உதவியும், உத்தரவும் கொடுக்க வேண்டுமாய் அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

17 யூனியன், அரசாங்கம், மான்யத் துவக்கப்பள்ளி முதலிய எல்லாப் பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியான விடுதிகாலம் (லீவ்) அனுமதிக்கும்படி இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

18. எல்லோருக்கும் கல்வி என எடுத்துரைக்கப்படும் இந்நாளில் கல்வி இலாகாவில் பணிபுரியும் எல்லா ஆசிரியர் ஆசிரியைகளின் எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்லூரிப் படிப்பு முடிய இலவசக் கல்விச் சலுகை வழங்க வேண்டுமாய் இம்மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

R. ராஜமாணிக்கம்
பொதுச் செயலாளர்

★

வினாப் பகுதி

1. இடைத்தர ஆசிரியராகப் பணி (Secondary Grade Teacher) புரியும் ஒருவர் பட்ட தாரியானதும் B. T. பயிற்சி பெற வேண்டியது அவசியமா?

N. V. பாலசுப்ரமணியம்.

2. தனிப்பட்டோர் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஏன் வீட்டு வாடகைப்படி கொடுக்கப் படவில்லை?

P. J. பார்த்தசாரதி.

கல்வி எதிரொலி
(EDUCATION ECHO)

தமிழாக்கம்: **ஆ. குப்புசாமி**

ஆசிரியத் தொழில் தொடர்பான அமைப்புக்களின் உலகக் கூட்டிணைப்பு (World Confederation of Organizations of the Teaching Profession)

ஜனவரி 1966 — வெளியீடு

புதுத்திட்டத்தின் தொடக்கம்

கல்வி ஆராய்ச்சி, பயிற்சி தொடர்பான இந்திய தேசியக் குழு (India's National Council of Educational Research and Training) ஒருதிட்டத்தைப் புதிதாகத் தொடங்கி வைத்துள்ளது. இதனுல், ஒவ்வோராண்டும் கணிதம், அறிவியல் ஆகிய துறைகளில், நன்கு பயிற்சி பெற்ற 6000-த்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நாட்டிற்குக் கிடைப்பார்கள்.

நன்கமைந்த அறிவியல் இலாகாக்களைத் தம்மகத்தே கொண்ட 50-ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளிலும், 20-பல்கலைக் கழகங்களிலும் நான்காண்டுப் பயிற்சித் திட்டமொன்று புதிதாகத் தொடங்கி வைக்கப்படும். அறிவியல், கணிதம், தொழில் துறை, விவசாயம், வியாபாரம் ஆகிய துறைகளில் பயிற்சி தருவதற்கென முன்னமேயே அமைக்கப்பட்டுள்ள நான்கு வட்டாரக் கல்லூரிகளில், ஒவ்வோராண்டும் மொத்தத்தில் 2000-த்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி பெறுவார்கள்.

ஒரு சில பல்கலைக் கழகங்களில், கணிதம், அறிவியல் ஆகிய துறைகளில், வல்ல ஆசிரியர்கட்கு, ஓராண்டு ஆழப்பயிற்சித் திட்டம் புதிதாகப் புகுத்தப்படும். இது

" விக்டாப் " தலைவர் சர். ரோனுல்ட் கௌல்ட் அவர்களின் படத்தின் கீழ்-நிற்பவர்களின் பெயர்கள் கீழ்வருமாறு : (இடமிருந்து வலமாகப் பார்க்க)

1. திருவாளர் சுங், செயல்நிறைவேற்று செயலாளர். கொரியக் கல்விச் சங்கங்களின் கூட்டிணைப்பு. 2. திருமதி வில்லியம் G. கார். 3. திருமதி சுங். 4. என்காம் டௌடௌ, தலைமைச் செயலாளர், Syndicat National des enseignants lancs. 5. வில்லியம் G. கார், " விக்டாப் " தலைமைச் செயலாளர்.

குறுகிய காலத்திட்டங்களில் ஒன்ருகும் ஊழியத்திலுள்ள ஆசிரியர்களுக்கு அஞ்சல் வகுப்புக்களுக்கும் நடத்தப்படும்.

ஹிரோஷி யோஷிடாவின் பேச்சு

ஜப்பானிலுள்ள "விக்டாப்" அலுவலகத்தின் இயக்குநர் ஹிரோஷி யோஷிடா "விக்டாப்பைப்" பற்றியும், "கற்பித்தல் ஒரு வாழ்க்கைத் தொழில்" என்பது பற்றியும் அக்டோபர்த் திங்களில், (ஜப்பானிலுள்ள) நாகானே நகரத்திலுள்ள ஷினனே கல்விச் சங்கப் பிரதி நிதிகள் கூட்டத்தில் பேசினர்.

டோக்கியோவிலுள்ள. கல்விச் செய்தி தொடர்பான பன்னாட்டமைப்பு, ஜப்



மேலேயுள்ளவர்கள் Syndicat des enseignants laics du Togo-வின் அலுவலர்களும், உறுப்பினர்களும் ஆவர். அவர்கள் முன்னல் இருப்பது "விக்டாப்பால்" அன்பளிப்பாக அளிக் கபபட்ட மிமியோகிராப் பொறியாகும். La Voie de l'Enseignant Togolais–என்ற திங்கள் இதழை வெளியிட அப்பொறி பயன்படுகிறது.

பானைப் பற்றிய புத்தம் புது உண்மைகள் அடங்கிய சிறு புத்தகத் தொடர். வரிசை ஒன்றை வெளியிட்டுள்ளது. பள்ளிப் பாட புத்தகங்கள் எழுதுகின்ற அயல்நாட்டு ஆசிரியர்களும், புத்தகம் வெளியிடுவோரும் இச்சிறு புத்தகங்களை ஜப்பான் தொடர் பான உண்மைகளைப் பற்றி எழுதிட வழிகாட்டிகளாகக் கொள்ளலாம்.

ஜப்பானியரின் வாழ்க்கை முறை, மரபு நிலை, சமயம், மண்ணியல், தட்ப வெப்பம், மக்கள் தொகை, விவசாயம், உணவு முதலியவற்றைப் பற்றிய செய்திகளை மேற்கூறிய சிறு புத்தகங்களில் காணலாம்.

இப்புத்தகங்களைப் பற்றிய விவரங்கள் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

International Society for Educational Information, Inc.,
Kyoiku Building,
No. 1, 8-Chome, Sangen-Cho,
Bunkyoku, Tokyo, Japan.



இப்படம் கிரேக்க மொழியில் முதன் முதலாக வெளியிடப்பட்டுள்ள "கல்வி எதிரொலியின்" முதற்பதிப்பாகும். கிரீசிலுள்ள ஆசிரியர்க் கல்லூரிகளின்-ஆசிரியச் சங்கத்தின் முன்னுள் பன்னுட்டு உறவுச் செயலாளர் டாக்டர் தியோடோர் ஹாரலம்பைட்ஸ் அவர்கள் இப்பத்திரிக்கையின் மொழி பெயர்ப்பாளராவார்.

கிரேக்க மொழியையும் சேர்த்துக் "கல்வி எதிரொலி" 13-மொழிகளில் மொழிபெயர்க்கப் படுகிறது. அம்மொழிகள் பின்வருமாறு: ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ், அரபி, சீனம், ஜெர்மன், கிரேக்கம், ஜப்பான், கொரியன், மலாய், போர்த்துகீஸ், தமிழ், தய். மேலும், இப்பத்திரிக்கையின் பதிப்புக்கள் ஆங்கிலத்தில், அக்ரா, கம்பாலா, சென்னை முதலிய இடங்களில் வெளியிடப்படுகின்றன.

"விளக்கத் துணைப்படங்கள் தயாரித்தல்"

இந்தியாவிலுள்ள, கல்வி ஆராய்ச்சி பயிற்சி தொடர்பான தேசியக்குழு "விளக்கத் துணைப் பொருட்கள் தயாரித்தல்" (Preparing Graphic Aids) என்னும் தலைப் பமைந்த, படம் நிறைந்த ஒரு சிறு புத்தகத்தை வெளியிட்டுள்ளது.

விளக்கத் துணைப் பொருட்களின் வகைகள், அமைப்புத்திட்டத்தின் அடிப்படைகள், எழுத்துத் தொழில் நுணுக்கங்கள், கண்ணைக்கவரும் வண்ணங்கள் பயன்படுத்தல், எளிய உருவிளக்கப்படத் தொழில் நுணுக்கங்கள், அமைப்புத் திட்டங்களுக்கும், உருவிளக்கப் படங்களுக்கும் பார்வைக் கோவைகள் வைத்தல், விளக்கத் துணைப் பொருட்களைத் தயாரிக்கத் திட்டமிடுதல் கருவிகளும், துணைப் பொருட்களும், அமைப்புத்திட்டங்களுக்குத் திருந்தா உருவிளக்கப்பட உதாரணங்கள் ஆகிய செய்திகளை மேற்குறித்த புத்தகத்தில் காணலாம்.

இதுப்பற்றிய விவரங்களை இன்னும் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க் காணும் முகவரிக்கு மடல் வரைவாராக.

Publications Unit.
National Council of Educational
Research and Training,
114, Sundar Nagar,
New Delhi-11, India.

பேராயம்

நவம்பர்த் திங்களில், 23-24 தேதியில், பாரிசில் நடந்த பிரஞ்சு ஆசிரியர்ச் சங்கக் கூட்டிணைப்பின் ஆண்டுப் பேராயத்திற்கு, "விக்டாப்" தலைவர் சர் ரோனல்ட் கௌல்ட் அவர்கள் தங்கள் வாழ்த்துச் செய்தியை அனுப்பி இருந்தார். "விக்டாப்

போடு" தொடர்பு கொண்டுள்ள பிரஞ்சு ஆசிரியச் சங்கங்கள் இக்கூட்டிணைப்புடன் இணைக்கப் பட்டுள்ளன.

பிரஞ்சு ஆசிரியர்கள் ஆசிரியத் தொழிலில் ஒருமை அடைய மேற்கொண்ட முயற்சிகளையும், தனி மனிதன் சுதந்தரத்தையும், சரிநிகர் கொள்கையினையும் காத்திடச் செய்த செயலினையும் அம்மடலில் பாராட்டி எழுதியுள்ளார் சர் ரோனல்ட்



தாய்லாந்தின் கல்விச் சங்கம், சூளாலொங்கார்ன் கல்விக் கலைத்திறன் பல்கலைகழகம்—ஆகியவற்றின் ஆதரவின் கீழ், 1963-ஆம் ஆண்டில், டிசம்பர்த் திங்களில், தாய்லாந்திலுள்ள பாங்காக்கில், ஆசிய, தென்பசிபிக் வட்டாரங்களில், கல்வி யாராய்ச்சி முன்னேற்றத்திற்காக நடந்த பன்னாட்டு மாநாட்டின் அறிக்கையே மேலுள்ள படம்.

"கல்வித் திட்டத்தில் கல்வி யாராய்ச்சியின் பங்கு" என்பதம் மாநாட்டின் பொருள்.

இவ்வறிக்கை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பிரிவில், மாநாட்டிற் பங்கு கொண்ட 22-பேர்களால் தயாரிக்கப்பட்ட 22-கட்டுரைகள் உள்ளன. தொடக்கவுரை, மீண்டும் மேற்கொண்ட நடவடிக்கைகள், குழு மாநாட்டு அறிக்கைகள், தீர்மானங்களும், மாநாட்டின் மதிப்பீடும் ஆகியவை இரண்டாம் பிரிவில் இடம் பெறுகின்றன. ஆசிய, தென்பசிபிக் வட்டாரங்களில், கல்வி யாரய்ச்சி செய்திட நிறுவப்பட்டுள்ள பன்னாட்டுச் சங்கம் பற்றிய செய்திகள் இறுதிப் பிரிவில் இலங்குகின்றன.

ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

The Education of Thailand,
58/1—2 Pisanuloke Road,
Bangkok, Thailand.

கௌல்ட் அவர்கள். 'இது நமது ஆசிரியச் சங்கங்களுக்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டாகவும், ஊக்கத்தின் உறைவிடமாகவும் உள்ளது. இதற்கு நாங்கள் மிக மிக நன்றியறிதல் உள்ளவர்களாக உள்ளோம்." என்று அவர் தமது மடலில் எழுதியுள்ளார்.

அஸ்மாராவில் அறிஞர் அரங்கம்

எதியோப்பியாவில் ஆசிரியச் சங்கம், "விக்டாப்பின்" நிதியுதவியோடு ஜனவரித் திங்களில் 14-ஆம் நாளிலிருந்து 17-ஆம் நாள் வரை அஸ்மாரா என்னும் இடத்தில், அறிஞர் அரங்கம் ஒன்றை நடத்தும். "விக்டாப்பின்" சார்பில் செயல் நிறைவேற்று குழு உறுப்பினர் ஸடீபன் சியோனியும், "விக்டாப்" செயலகத்தைச் சேர்ந்த கிளபெர் லைலாட்டும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

நீக்ரோக்களின் முதல் உலகக் கலை விழா

1966-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், 4-ஆம் நாளிலிருந்து, 24-ஆம் நாள் வரை


MAJALLAH PELAJARAN MALAYSIA

馬來西亞教育學報

MALAYSIAN JOURNAL OF EDUCATION

第二卷 第一期 VOLUME 2 NUMBER 1

目次 CONTENTS

The Beginnings of Extra mural Studies in the University of Singapore — M. Bakar (1— 11)
Preparatory Classes at Nanyang University, 1956-1964 (Abstract) — Chow Woon Yong (12— 25)
A Brief History of American Education — Carlton E. Beck (26— 37)
Sex Differences and Physical Activities for Girls (Abstract) — S.H. Chang (38— 41)
Guidance Services in Edinburgh — W.K. Yip (42— 55)
Code of Professional Ethics for Malaysian Teachers: A Draft Proposal (Abstract) — Wang Shao Nan (56— 61)
What is WCOTP — William G. Carr (62— 66)
A Study of the Causes of Juvenile Delinquency (Abstract) — P.T. Tai (67— 85)
The Singapore Workers' Education Association, 1950-1960 — J.F. Conceicao (86— 96)
Correspondence (97— 99)
Book Review (100—117)
From the Publishers (118—120)

Hon. Editor
Gwee Yee Hean
School of Education
University of Singapore
Singapore.
June 1965.

இஃது மலேசியக் கல்விப் பத்திரிக்கையின் மலர் 2-ன் முதல் இதழாகும்; சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டது. "விக்டாப்" தலைமைச் செயலாளர் வில்லியம் ஜி. கார் அவர்கள் "விக்டாப் என்றால் என்ன?" என்ற தலைப்பின் கீழ், இதில், ஒரு கட்டுரை வரைந்துள்ளார். சிங்கைப் பல்கலைக்கழகத்தில் இப்பத்திரிக்கை வெளியிடப் படுகிறது.

செனகாலைச் சேர்ந்த டாகர் என்னும் இடத்தில், நீக்ரோக்களின் முதல் உலகக் கலை விழாவில், இசை, நடனம், கலைக்காட்சிகள் முதலியவை இடம் பெறுகின்றன. ஆப்பிரிக்கா, ஐரோப்பா, மேற்கிந்தியத் தீவுகள், அ. ஐ. நாடுகள் ஆகிய கண்டங்களி லிருந்தும் நாடுகளிலிருந்தும் வரும் பிரதிகள் இவ்விழாவிற்கு வருகை தருவார்கள்.

கல்வியமைச்சகத்தின் ஆராய்ச்சி

ஐக்கிய அரபுக் குடியரசின் கல்வியமைச்சரகம், பள்ளியில் சேர விரும்புவோரின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டு வருவதால், அவர்கள் எல்லோருக்கும் இடங்கொடுக்கும் நோக்குடன், தொடக்கப் பள்ளியில் படிப்பை ஆறாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளாகக் குறைக்கும் புதுத்திட்டம் ஒன்றினை ஆராய்ந்து வருகிறது.

சில வகுப்புகளின் பாடத் திட்டங்களை மற்ற வகுப்புகளுடன் சேர்ப்பதன் மூலமும், தற்போது பள்ளிகளில் கற்பிக்கப்படும் சில படிப்புக்களைத் தள்ளி விடுவதன் மூலமும் ஓராண்டுக் குறைப்புத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்பது மேற்கூறிய புதுத்திட்டத்தின் உட்பொருளாகும்.

டான்சானியாவிலுள்ள தார்-எஸ்-சலாம் பல்கலைக் கழகக் கல்லூரியில், ஜனவரித் திங்கள் 17-ஆம் நாளிலிருந்து, 25-ஆம் நாள் வரை, ஐக்கிய நாட்டுச் சங்கங்கள் உலகக் கூட்டிணைப்பு. ஐக்கிய நாட்டு அமைப்பைப் பற்றிக் கற்பித்தலின் மூலம், ஒரு நாடும் ஒரு நாடும் உறவு கொள்ளல் ஒத்துழைத்தல் தொடர்பான 20-ஆவது மாநாட்டினை நடத்தும் இம்மாநாட்டிற் பங்கு கொள்ள ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த எட்டுக் கல்வி வல்லுநர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

பல்கலைக் கழகக் கல்லூரியைச் சேர்ந்த முதியோர் கல்வி நிறுவனத்தின் ஒத்துழைப்போடும், விக்டாப்பின் நிதியுதவியோடும் இம்மாநாடு நடத்தப்படுகிறது.

எதியோப்பியா, கென்யா, மாளவி, சோமாலியா, டான்சானியா, உகாண்டா சாம்பியா ஆகிய நாடுகளின் கல்வி வல்லுநர்கள் இம்மாநாட்டிற் கலந்து கொள்கின்றனர்.

கென்யாவைச் சேர்ந்தவரும், "விக்டாப்" செயல் நிறைவேற்று குழுவின் உறுப்பினருமான ஸ்டீபன் கியோனி என்பவர் மாநாட்டின் துணைத் தலைவராவார். கிழக்காப்பிரிக்காவில் ஐக்கிய நாட்டு அமைப்பைப் பற்றிக் கற்பித்தல் தொடர்பான மாநாடு WFUNA-வினுல் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்படுகிறது.



பண்பாட்டு ஒத்துழைப்புக் குழுத் தனது கூட்டத்தை நவம்பரில், ஸ்ட்ராஸ் பரி என்னும் இடத்தில் நடத்தியபோது ஒரு புத்தகத்தை வெளியிட்டது. அதைப் பற்றி சர் ரோனல்ட் கௌல்ட் அவர்கள் (இடமிருந்து வலம், இரண்டாவது) பேசிக் கொண்டிருப்பதைப் படத்தில் பார்க்கலாம்.

படத்தில் உள்ளவர்களின் பெயர்கள் (இடமிருந்து வலமாக) பின்வருமாறு :

1. G. நியூமான், பண்பாட்டு ஒத்துழைப்புக் குழுவின், தொழில் நுணுக்கம் பொதுக் கல்விப் பிரிவின் இயக்குநர் ; 2. சர்ரோனல்ட் ; 3. A. ஹெய்க், பண்பாட்டு ஒத்துழைப்புக் குழுவின் இயக்குநர் ; 4. வில்ஹெல்ம் ஈபர்ட், "விக்டாப்" பாரீஸ் அலுவலகத்தின் இயக்குநர்.

இம்மாநாட்டின் நோக்கங்கள் கீழ் வருமாறு :

1. மாநாட்டிற் கலந்து கொள்ளும் நாடுகளிலுள்ள பள்ளிகள், கல்லூரிகள் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள், முதியோர் கல்வி நிலையங்கள் ஆகிய இடங்களில், ஐ. நா அமைப்புப் பற்றிப் போதித்தல் ;

2. தற்போதுள்ள முதியோர் கல்வித் திட்டங்களை விரிவு படுத்தும் வழிவகைகளை ஆராய்தல் ;

3. அறியாமையை அகற்றும் அகில உலக இயக்கத்தில் அரசினரும், அல்லாதாரும் பங்கு கொள்ளும் திட்டங்களைச் சிந்தித்துச் சீர் தூக்கிப் பார்த்தல்.

குவாடி மாலாவைச் சேர்ந்த கல்வி வல்லுநர் சிலர் "விக்டாப்" செயலகத்திற்கு நவம்பரில் வந்திருந்தனர். அவர்கள் "விக்டாப" நூலகத்தில், நின்று கொண்டிருப்பதை மேலுள்ள படத்தில் பார்க்கலாம். "விக்டாப்பின்" மொழி பெயர்ப்பாளர்களில் ஒருவரான ஜுன்–பால் சவேரி அவர்களுக்கு 'விக்டாப்" நிகழ்ச்சி நிரல், வெளியீடுகள் முதலியவற்றைப் பற்றி விளக்கிக் கூறுவதைப் படத்தில் பார்க்கலாம்.

"ஐ.நா. சங்கத்தைப் பற்றிக் கற்பித்தல்" ("Teaching About the U.N.")

கனடாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சங்கத்தின் இளைஞர், கல்விப் பிரிவு "ஐ. நா. சங்கத்தைப் பற்றிக் கற்பித்தல்" என்னும் கல்விச் செய்தியறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. ஆசிரியர்களுக்குப் பெரிதும் பயன்படும் அவ்வறிக்கை "விக்டாப்" செயலகத்திற்குக் கிடைத்துள்ளது.

"ஐ. நா. சபையைப் பற்றிக் கற்பித்தல்," "படிப்பில் ஐ. நா. சபை எங்கே பொருந்துகிறது?," 'குழந்தைகளின் பன்னாட்டுக் கோடைக் கிராமங்கள்," "B. B. C. பள்ளி ஒலி பரப்புக்கள்," "திரைப்பட மதிப்புரைகள்" ஆகிய தலைப்புக்கள் மேற்சொல்லிய அறிக்கையில் அடங்கியுள்ளன.

இவ்வறிக்கையைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

Youth and Education Division,
United Nations Association in Canada,
329, Bloor Street West,
Toronto 5,
Ontario, Canada.

அறியாமையை அகற்றும் பணி

அடுத்த மூன்றுண்டுகளில், 360,000 வெனிசூலா மக்கள் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வார்கள் என்ற செய்தியை வெனிசூலாக் கல்வியமைச் சகத்தைச் சேர்ந்த முதியோர் கல்வி அலுவலகம் வெளியிட்டுள்ளது.

எழுத்தறிவின்மையை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டத்தின் முதல் ஆறுண்டுகளில், ஏறத்தாழ ஒன்றரை மிலியன் வெனிசூலா மக்கள் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டனர். தென்னமெரிக்காவிலேயே எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ள நாடு அர்ஜன்டினுவாகும்; அதற்கடுத்தபடியாக வெனிசூலாவைச் சொல்லலாம்.

எழுத்தறிவின்மையை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொண்டர்களின் எண்ணிக்கை 40,000 ஆகும். ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், உயர்தரத் தொடக்கப் பள்ளிகளிலும் பயில்வோர்கள் தொண்டர்களாகப் பணிபுரிகின்றனர்.

" பள்ளிகளும் பத்திரிகைகளும் "

அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள தேசியப் பள்ளிப் பொதுத் தொடர்புச்



1950-ல், கனடாவிலுள்ள ஒட்டாவாவில், ஆசிரியத் தொழில் தொடர்பான உலக அமைப்பின் கூட்டம் நடந்தபோது மேலுள்ள படம் எடுக்கப்பட்டது. அஃது "விக்டாப்பின்" ஆய்புரையிலிருந்து எடுக்கப்பட்டு இப்போது இவ்வேட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வமைப்பு விக்டாப்பை நிறுவிய சங்கங்களில் ஒன்ருகும்.

மேலேயுள்ள எட்டுப் பேரும், அவரவர் நாட்டிலுள்ள ஆசிரிய அமைப்புக்களின் செயலாளர்கள் ஆவர். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு (இடமிருந்து வலம்)

1. மார்சிலினே பாடிஸ்டா, பிலிப்பைன்ஸ் பொதுப் பள்ளிக் கூட ஆசிரியச் சங்கம்;
2. J. கிங் கர்சன், உல்ஸ்டர் ஆசிரிய ஒன்றிப்பு;
3. அலக்சாண்டர் பெல்போர்டு, ஸ்காத்லந்து கல்வி நிறுவனம்;
4. சர் ரோனல்ட் கௌல்ட், இங்கிலாந்து, வேல்சைச் சேர்ந்த தேசிய ஆசிரியர்களின் ஒன்றிப்பு (பின்னர் " விக்டாப்பின் " தலைவரானவர்.)
5. வில்லார்ட் கிவன்ஸ், அமெரிக்க ஐக்கிய நாட்டின் தேசியக் கல்விச் சங்கம்;
6. ஜார்ஜ் குரோஸ் கிரி, கனடியன் ஆசிரியர்க் கூட்டமைப்பு.
7. M. S. கோடீஸ்வரன். அனைத்திந்தியக் கல்விச் சங்கங்களின் கூட்டமைப்பு;
8. கிளபர் வைலாட், ஹைட்டியன் ஆசிரிய ஒன்றிப்பு (இப்போது இவர், "விக்டாப்" ஆப்பிரிக்காப் பிரிவின் தனிச் சிறப்பு ஆராய்நராக உள்ளார்)

சங்கம் கல்வி வல்லுநர்கட்குப் பயன்படும் விதத்தில் "பள்ளிகளும் பத்திரிக்கைகளும்" என்ற கைப் புத்தகத்தை வெளியிட்டுள்ளது.

112-பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தில், செய்தி எவ்வாறு சேகரிக்கப் படுகிறது, பத்திரிகை எவ்வாறு பதிப்பிக்கப்பட்டு அச்சிடப்படுகிறது. நிருபர்களின் வகைகள் போன்ற செய்திகள் அடங்கியுள்ளன. இவ்வேடு பள்ளிகளுக்கும், பத்தி

"விக்டாப்" வெளியீடான "Your Friends in Japan" என்ற புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பே கீழுள்ள படம். இப்புத்தகம், அனைத்திந்தியக் கல்விச் சங்கங்களின் கூட்டிணைப்பில் அங்கம் வகிக்கும் தென்னிந்திய ஆசிரியச் சங்கத்தின் வெளியீடாகும்.

ரிக்கைகளுக்கும் இடையே இருக்கவேண்டிய நல்லுறவின் தேவையை வலியுறுத்திக் காட்டுகிறது.

இதன் விலை 2.50 டாலராகும். இதனை வாங்கிப் படிக்க விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

Nspra,
1201 Sixteen Street N.W.,
Washington D.C. 20036,
U.S.A.

தனிக் கல்விச் சங்கத்தின் பன்னாட்டு மாநாடு

1966-ஆம் ஆண்டு ஜூலை 25-ஆம் நாளிலிருந்து 28-ஆம் நாள் வரை இலண்டனில், தனிக் கல்விச் சங்கத்தால் பன்னாட்டு மாநாடொன்று நடத்தப்பட இருக்கிறது. "தனிக் கல்வி என்றால் என்ன?" என்பது அம்மாநாட்டின் பொருள்.

தனிப்பட்ட பள்ளிக் கூடங்களிலும், மற்றப் பள்ளிக் கூடங்களிலும் பயிலும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு நல்கும் கல்வியின் நோக்கம், பயிற்சி, அமைப்பு முறை ஆகியவற்றைத் தெளிவாக ஆராய்தலே இம்மாநாட்டின் நோக்கமாகும். இஃது இலண்டன் பல்கலைக் கழகக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த ஆவொரிஹில் கல்லூரியில் நடைபெறும்.

மாநாட்டின் மொழி ஆங்கிலமாகும். எனினும், வேண்டுகோள் விடுக்கப் பட்டால், முக்கியப் பேச்சுக்கள் பிரஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மனி, ரஷ்யா ஆகிய மொழி களில் மொழிபெயர்த்து அனுப்பப்படும்.

ஆப்பிரிக்கா, ஆசிரியர், இலத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களிலிருந்து வந்த பாட புத்தக எழுத்தாளர்களிடையே, ஐக்கிய நாட்டு அமைப்புத் தலைமைச் செயலாளர் (இ.பக்கம்) ஊதாண்ட் அவர்கள் பேசுவதை மேலுள்ள படத்தில் பார்க்கலாம். இக் கூட்டம் பொதுச் செய்தி அலுவலகத்தில் நியூயார்க்கிலுள்ள ஐ. நா அமைப்பின் தலைமைச் செயலகத்தில், நடத்தப் பட்டது. தலைமைச் செயலாளருக்கு இடப்பக்கத்தில் அமர்ந்திருப்போரின் பெயர்கள் முறையே கீழ்வருமாறு :

1. ஜோஸ் ரால்ஸ்-பென்னெட் அரசியற் செய்திகளின் கீழ்நிலைச் செயலர், பொதுச் செய்தி அலுவலகத்தின் பொறுப்பாளர்; 2. ஜார்ஜ் J. ஜேனிசெக், OPI-ன் வெளிவிவகாரத் தொடர்புப் பிரிவின் இயக்குநர்; 3. கான்ஸ்டான்டின் ஸ்மிர்நோவ், OPI-ன் வெளி விவகாரத் தொடர்பபுப் பிரிவின் துணை இயக்குநர்.

மேலும், இதனைப் பற்றிய விவரங்கள் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் வரைவாராக.

V. G. T. Rozewell,
Conference Secretary,
Franklin Delano Roosevelt School,
Avenue Road, London, N.W. 8, England.

விளக்கப் படங்கள்

ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியின் உலகப் பணியினை விளக்கும் விதத்தில், " யூனிசெப் " இரு தொகுதிகளாக விளக்கப் படங்களை அண்மையில் வெளியிட்டுள்ளது. இவ்விரு தொகுதிகளில் ஒன்றில், குழந்தைகள் நிதியின் திட்டங்களை விளக்கும் ஆசியாக் கண்டத்துப் புகைப்படங்கள் பட்டுமுள்ளன : மற்றொன்றில், உலகைச் சுற்றி எடுக்கப்பட்டுள்ள புகைப்படங்கள் அடங்கியுள்ளன.

இவ்விளக்கப் படங்கள் வேண்டுவோர் எழுத வேண்டிய முகவரி இதுதான் :

Unicef Public Information Office,
United Nations, Newyork, U. S. A.

★

எழுதுங்கள் வெளியிடுகிறோம்

கல்வியோடு தொடர்புடைய கட்டுரைகள், கதைகள், கவிதைகள் நாடகங்கள் முதலியவற்றை முழு அளவுத் தாளில், ஒரே பக்கத்தில், 5 - பக்கங்களுக்கு மிகாமல் ஆசிரியர்களும், மற்றவர்களும் எழுதியனுப்பினால் வெளியிடத் தகுந்தவை வெளியிடப்படும்.

Statement about the ownership and other particulars about the Newspaper ' Balar Kalvi ' to be published in the first issue every year after the last day of February.

FORM IV

RULE : 8

1.	Place of publication	**South India Teachers Union, Robertsonpet, Raja Annamalaipuram, Madras-28.**
2.	Periodicity of its publication	**Monthly**
3.	Printer's name	**Rev. Br. Antony**
	Nationality	**Indian**
	Address	**St. Louis Institute Press, Canal Bank Road, Gandhinagar, Madras-20.**
4.	Publisher's name	**L. Mariapragasam, B.A., L.T., J.P. General Secretary, S.I.T.U. Madras-28**
	Nationality	**Indian**
	Address	**No. 6, Kutchery Road, Mylapore, Madras-4.**
5.	Editor's name	**Sri A. K. Sitaraman, B.A., L.T. President, S.I.T.U. Madras-28**
	Nationality	**Indian**
	Address	**No. 8, Abiramapuram 1st Street, Abiramapuram, Teynampe P. O. Madras-18.**
6.	Name and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.	**South Indian Teacher's Union Robertsonpet, Rajah Annamalaipuram, Madras-28.**

I, L. Mariapragasam hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

March 4th, 1966

Publisher
L. MARIAPRAGASAM

Regd. No. M. 3473
Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57

எலிமெண்டரி பாடசாலைக்குறிய

எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

1-ம் வகுப்பிலிருந்து 5-ம் வகுப்புகளுக்குரியவை

பொங்கல் தமிழ் வாசகம்

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	37 ந. பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	50 ,,
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	65 ,,
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	85 ,,

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	40 ந. பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,

லீலாவதி சுலப கணிதம்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	9 ந. பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 00

நவீன சுலப கணிதம்

முதல் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 25

நவீன சமூக வரலாறு

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	45 ந. பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	75 ,,

புது முறை சமூக வரலாறு

முதல் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 12
இரண்டாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 90

நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ந. பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	40 ,,
மூன்றும புத்தகம்	(நான்காம் வகுப்பு)	80 ,,
சிற்றிலக்கணம்	(ஐந்தாம் வகுப்பு)	50 ,,
சிறுமணிக் கதைகள்	(ஐந்தாம் வகுப்பு)	50 ,,

பயிற்சி புத்தகங்கள்

நவீன சமூக நூல் பயிற்சி புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	80 ந. பை.
Progressive Work Book in English Book I—Standard V		80 nP

இங்கிலீஷ் பாடப் புத்தகங்கள்
3-ம், 4-ம் வகுப்புகளுக்குரியவை

Coronation Revised English Reader, Primer	50 nP
Coronation Revised English Reader, Primer, Part-I	40 nP
Coronation Revised English Reader, Primer, Part-II	40 nP

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

4, பிரான்ஸி ஜோஸப்புத் தெரு, சென்னை-1

CONNEMARA PUBLIC LIBRARY